# புழுவிற்கும் சிறகு முளைக்கும்



இ.சு.முரளிதரன்

# புழுவிற்கும் சிறகு முளைக்கும்

**இ.சு.முரளிதரன்**



புழுவிற்கும் சிறகு முளைக்கும்

ஆசிரியர் / இ.சு.முரளிதரன் @


முதற்பதிப்பு
ஐப்பசி 2008

வெளியீடு
மேதினிகா வெளியீடு
34/03 செட்டித்தெரு,
நல்லூர், யாழ்ப்பாணம்
இலங்கை

நூலழகு
மௌஸ்பாய்ண்ட்
சென்னை-5

அச்சாக்கம்
மதிகலர்ஸ் பிரிண்டேர்ஸ்
முருகேசர் ஒழுங்கை
நல்லூர், யாழ்ப்பாணம்





# தமிழே

சங்கத்தில் தென்பொதிகை மன்றத்தில் பூப்படைந்து
பொங்கி நடைபோட்ட பூந்தமிழே - அங்கமெலாம்
எண்ணக் கனவுகளை ஈந்தவளே! சின்னவனின்
வண்ணக் கவி மொழியில் வா !

மார்பின் அழகை மதனகலை வித்தைகளை
கூறும் கவிகடந்து கூர்ப்படைந்தாய் - போரில்
அழகிழக்கா ஆடகப் பொற் சித்திரமே
மழலைக் கிழவியடி நீ !

ஏதேதோ நானெழுத என்னை இனங்கண்டு
காதோரம் வந்து கவி சொன்னாய் - மாதே நீ
வற்றாத வார்த்தை வரந்தந்தாய் ! ஆட்கொண்டாய்
சொற்களுக்குள் வைத்தாய் சுகம்.


அழகின் கருவறையே ஆருயிரின் வேரே
கலையருவிக் குன்றே தமிழே - நிலவொளியே
சின்னமகன் எந்தன் சிறுவரியில் வந்தமர்ந்தால்
உன் மடியில் போகும் உயிர்.


❐



5

இ.சு.முரளிதரன்






# நல்லூரான்
# காத்தருள்வான் நம்பு

மின்னற் கவிவரியாய் மோகனத்துச் சொல்நயமாய்
அன்பர் குறையகற்றும் அட்சயமாய் - என்றென்றும்
நல்லூரில் வீற்றிருக்கும் நற்றமிழின் காவலனே
வல்லமைதா நானுன் வசம்

பாவக்குளத்தில் பரிதவிக்கும் ஆன்மாவே
சேவற் கொடியோனின் சீரடிசேர் - சா...வந்தால்
சொல்லாத காசிந்தச் சீழ்மேனி உள்ளுயிரை
நல்லூரான் காத்தருள்வான் நம்பு

எள்ளி நகைக்கும் எமனுறவை நீறாக்க
வள்ளிநாதன் தானே வரவேண்டும் - துள்ளிவரும்
வேற்படையோ துன்பமதன் வேரறுக்கும் சூரகுலம்
தூளாகும் நம்பித் துதி



இ.சு.முரளிதரன்

பணம் பதவி சிற்றின்பம் பாராளும் வேட்கை
தினமும் புகழ்ப்பூவா தேவை? - பிணமானால்
நீரொடு சாம்பல் நாம் நிம்மதிக்கு நல்லூரான்
தேரடியே என்று தெளி

எல்லாம் அவன் செயல் ஈசன் மகன் செயல்
பொல்லாப்போ இல்லை யெனப்போற்று - நல்லூரான்
துன்பக் கடல்நடுவில் சூரசம்கா ரம்செய்வான்
வெண்புறாவை வென்றுதரும் வேல்

சிங்கமுகா ஏனிந்தச் சிற்றறிவு? ஆணவத்தில்
பொங்குவதா? பின்பு பொடிப்பொடிதான் ! -
செங்கொடியோன்
தேவர் துயரழிக்க தீவிந்தில் வந்துதித்த
கோபப் புணர்ச்சியின் கோன்

தமிழ்ச் சங்க கர்ப்பமே ! தந்தை குருவே !
திமிர் கொண்டசுரர் செய் தீங்கில் - உமிழ்ந்தவனே !
இன்றெழுந்த சூரர் இனமழிக்க ஈழத்தில்
புண்ணியனே போர்க்கோலம் பூண் !

❐

# ஈற்றசைக்கும் வேண்டும் இடம்

வள்ளுவன் யாத்த
குறள் வரியாய் நாமிருந்தோம்
ஈற்றடி என்று எள்ளி
ஏனோ உறவறுத்தாய் !
உள் அர்த்தம் கெட்டு உயிரழிந்த பின்னாலே
வாசகமாய் வாழ முடி வெடுத்தோம்,
'யாப்பை' அறிவுறுத்தி
சிற்றடி தேவையென்று சொல்லி
தனித்துவத்தைத் தடை செய்தாய் !
ஒன்று பட்டால்
பொருள் தரலாம் என்று கரம் நீட்டி நின்றாய்
உணர்வும் உயிர்த்துடிப்பும்
வேண்டுமெனச் சொன்னோம்
குறட்பா குலையாமல்
காக்கும் கடமை உனக்கென்றால்....
சொல்லறிந்து செய் அமைப்பை
உன் பெரிய சீர்க்கனி கைவிடுவாய்
ஈற்றசைக்கும் வேண்டும் இடம்

❐



இ.சு.முரளிதரன்

# கடலில் நனையாத வலைகள்

பூந்தென்றல் தேடுகின்ற
பொன்வண்டின் புத்திரர் நீர்
பேந்தென்ன போராட்டப்
புயல்பற்றித் திறனாய்வு

கடலுக்குள் இறங்காது கரையினிலே நின்றீர் - எம்
பரதவர்க்கும் அலைமொழியை படிப்பிப்பேன் என்றீர்.


ஈழத்தின் காயத்தை
எட்டிநின்று பார்த்துவிட்டு
ஆழத்தை விளங்காது
அவசரமாய் விமர்சனமா...?



இதுவரை நாம் பட்டவலி இமயமலை உயரம் - வான்
தூவுமழைத் துளிகளது கணக்கெடுப்பில் துயரம்.

வெடிகுண்டு கவிபாடும்
வேட்டோசை கைதட்டும்
அடிவானம் போல்தேசம்
அக்கினியாய் சிவந்திருக்கும்
பிணம்பங்கு போட்டிடுவோம் போர் முடிய நாங்கள் - ஏன்
இவை எவையும் புரியாது புலம்புகிறீர் நீங்கள்

வெள்ளிநிலா முற்றத்தில்
விண்மீன்கள் சுற்றத்தில்
நள்ளிரவு நித்திரையில்
நாய்குரைத்து எழுப்புகையில்



அச்சஉடை அணிந்து மனம் அடியுயிரைக் கலக்கும் - இங்கு
பச்சை வெறி புகுந்தமனை பாலகரை இழக்கும்.

குன்றாத மலையில்லை
குளிரோடை நதியில்லை
அன்றாட நிகழ்வேதும்
அழிவின்றி வரவில்லை


ஆனாலும் மண்ணைவிட்டு அயல்நாடு போகோம் - எமை
ஆள்வதின்றி சர்வதேச அகதியென ஆகோம்.

முத்தசத்தம் சுரம்பிரிக்கும்
மோகஇசைக் கலைகளில்லை
ரத்தமழை நனையாத
ராகங்கள் இங்கில்லை
தாய்மடியில் உறங்குவதே தனயனது தாகம் - அந்தத்
தமிழ்க் கனவைக் காப்பதற்கே தணலில் உயிர் வேகும்.

துன்பங்கள் சூழ்கையிலும்
துவக்குகளே ஆள்கையிலும்
வன்முறையின் பாதையிலே
வரலாறு நீள்கையிலும்

கல்லறைமுன் சபதமிட்டோர் கனவு உமக்குப் புரியாது - எம்
கடல் நீரின் ஆழத்தைக் கரைவலைகள் அறியாது.

❐



# விருப்பத்தின் கர்ப்பம்

புல்நுனியில் பனித்துளிகள் விரும்புகின்றேன்
  பூங்குயிலின் ‘சிம்பனியை’ விரும்புகின்றேன்
சில்லெனவே உயிர்த்துளியை உரசுகின்ற
  சின்னச்சின்ன மழைத்திவலை விரும்புகின்றேன்
தள்ளிநின்று பேசுகின்ற நெருப்பு நாக்கில்
  தளிர் உடம்பு குளிர்காய்தல் விரும்புகின்றேன்
கள்ளமாக மேனியினை வருடும் தென்றல்
  காதலன்போல் பழகுவதை விரும்பு கின்றேன்

குறும்புடனே கிளையில்காற்றுக் ‘கிளுக்’கிண்ட
  குலுங்கிமலர் சிரிப்பதனை விரும்புகின்றேன்
அரும்புமீசைப் பருவமதில் நானிருந்தால்
  அடுத்தவீட்டு யன்னலையே விரும்புகின்றேன்
மருதாணி பூசுவிரல் விரும்புகின்றேன்
  மாமரத்து அணிற்பிள்ளை விரும்புகின்றேன்
சருகான இலைமேட்டில் குருவிக்கூட்டம்
  தத்தித்தாவும் ஓசைதனை விரும்புகின்றேன்.





இ.சு.முரளிதரன்




உடன் பிறவாச் சோதரியை விரும்புகின்றேன்
  உண்மையன்பு பாசத்தை விரும்புகின்றேன்
குடஞ் சுமக்கும் குமரி நடையோடு தண்ணீர்
  குலுங்கிமெல்லத் தளும்புமோசை விரும்புகிறேன்
அடம்பிடித்து சோகங்கள் சூழ்ந்து நின்றால்
  அமைதியான புன்னகையே விரும்புகின்றேன்
வடம் பிடித்து நல்லூர்த்தேர் இழுத்து வேலை
  வணங்குகின்ற பக்திநிலை விரும்புகின்றேன்


நிஜமான நேசமொன்றை பிரியும் போது
  நெகிழ்கின்ற நிமிடத்தை விரும்புகின்றேன்
அயராது வேலை செய்வோர் நெற்றி மீது
  அரும்புகின்ற துளிவியர்வை விரும்புகின்றேன்
வயலெங்கும் பூப்படைந்த பெண்ணைப்போல
  வளர்ந்தகதிர் தலைசாய்தல் விரும்புகின்றேன்
பயமின்றி அடையாள அட்டை இன்றி
  ‘பாஸ்’ இன்றி பயணங்கள் விரும்புகின்றேன்

சொந்தமற்ற உயிர்பிரிந்தால் மனிதம் பேசும்
  சுடுகாட்டுத் தத்துவங்கள் விரும்புகின்றேன்
அந்தணப்பா விருத்தங்கள் விரும்புகின்றேன்
  அக்கினிச் சொற் புதுக்கவிதை விரும்புகின்றேன்
எந்தையர்கள் ஈழமதை ஆண்ட காலம்
  மீளவரும் எனும்கனவை விரும்புகின்றேன்
செந்தமிழே... இதுகவிதை இல்லை என்றால்
  செம்மணியில் புதைப்பதையே விரும்புகின்றேன்.

❐








# செம்மணி

இந்தமண் சரித்திரம்! இனவாதம் எழுப்பிய
செந்தமிழ் தேசத்தின் சிவப்பு தாஜ்மஹால்
கந்தகக் கற்புடன் கண்ணகி புதைந்ததும்
செந்தழல் பரப்பிய சாம்பலின் சாகரம்
முத்தமிழ் தேசத்தின் மொகஞ்ச தாரோ
புத்தனை வழிபடும் போதி மரங்கள்
நித்திய பூசை நிகழ்த்திய ஆலயம்
புத்திர சோகத்தின் புதுஅஞ்சல் முகவரி
வன்முறை நாவலின் வரலாற்றுப் பக்கம்
புண்சுமந் திசைக்கும் புல்லாங்குழல்மண்
தழும்புகள் தேடும் தமிழரின் விடுகதை
அழுகையின் பின்புலம், பிழைகளின் தாயகம்

பாலியற் கொடுமையின் படிமச் சிற்பம்
காளிகூழ் ஆடிய கலிங்க பூமி
உக்கிரப் போரின் ஊமை பாஷை
வக்கிர உணர்வின் வாடகை வீடு
எத்தனை படிமம் எடுத்துரைத்தென்ன?
நித்திய மரண நீசமண் புகழது
ஆதிசேடன் தன் ஆயிரம் நாவினால்
தேதி வாரியாய் செப்பினும் தீருமா?
உறங்கும் உண்மைகள் உயிர் பெற்றெழுமா...?
விறகொடு போனவை வெளிவரக் கூடுமா?
செம்மணிச் சாம்பலில் உறங்கிடும் எரிமலை
விம்முமா? வெடிக்குமா...? வேடம் கலைக்குமா?

❒





# நெஞ்சினிலே

நெஞ்சத்தில் பூத்தவளே!
நினைவுகளின் திருவிழாவே!
வஞ்சியுனைக் கவிமொழியில்
வடிக்காமல் போவேனோ?

வட்டநிலா விழுதுபற்றி
வானேறி உன்பெயரை
நட்சத்திர நெற்றிகளில்
நானெழுதிப் போகேனோ?

மிச்சங்கள் வைக்காமல்
மேகலையும் கடந்துசென்று
உச்சங்கள் உரசியபின்
உயிர்த்துளியைப் பிரிவேனோ?

ஆவிகரைய இன்னும்
அரைநிமிடம் இருந்தாலும்
தேவி உன் திருமடியைத்
தேடிவர மாட்டேனோ?

விலை பேசா எழில் நிலவே
விடியும் வரை உன் மடியில்
அலைநீரில் மழைத்துளியாய்
அத்வைதம் ஆகேனோ?

இதயத்தில் குடியிருக்கும்
என்னவளே...! உன்நினைவில்
விதவிதமாய் கனவுமழை
விண்வெளிக்கு அனுப்பேனோ?

❐

இ.சு.முரளிதரன்






# குறும்பா

சிவபெருமான் வீதியுலா வந்தார்
செம்பொன்னில் புதுப்பொலிவு தந்தார்
அவரடியார் திரைமெட்டை
நாதசுரம் கொண்டிசைக்க
புவனத்தைப் படைத்ததற்கு நொந்தார்

சுப்பையா மூடிவிட்டார் கண்கள்
சுருதியற்றுக் கிராமத்துப் பண்கள்
அப்போது 'ரீவி' யிலே
'சீரியல்' முன் அமர்ந்திருந்தார்
ஒப்பாரி சொல்லியழும் பெண்கள்

அடைத்ததுவோ 'ஏநைன்' ஆம் வீதி
அதிரடியாய் விலையேறும் நீதி
தடையகற்றக் கப்பலேறும்
பங்கீட்டுப் பொருள்களது
நடைபாதைக் கடைகளிலே பாதி





பள்ளிதனில் பகற்பொழுது அரட்டை
படம்முடிய இரவினிலே குறட்டை
அள்ளகாசு 'ரியூசனிலே'
மனனஞ்செய் விடைக்குறிப்போ
கள்புளித்து நாறுகின்ற சிரட்டை

கூலிவேலை பார்க்கின்ற செந்தில்
குடி வெறியில் யோசித்தார் சந்தில்
தாலியேற்றாள் சொல்லிவிட்ட
தரம் பத்துக் கணிதமில்லை
நூலிரண்டு வாங்கலாமா ஐந்தில்?

கண்ணகியோ பிடுங்கியதை எறிந்தாள்
கனலெழுப்பிக் கற்புருவாய்த் தெரிந்தாள்
வெண்திரைவாழ் நாயகியோ
மறத்தமிழன் தொழுதிருக்க
உண்டியலாய் குலுக்குதற்கே அறிந்தாள்

❒



# வரம்

யுத்தங்கள் மேயாத வாழ்வு வேண்டும்
உயிர்த்திவலை பருகாத தேசம் வேண்டும்
குத்துக்கள் வெட்டுக்கள் குண்டு போடல்
குலத்தோடு குடியழித்தல்: பின்பு பாயும்
ரத்தத்தில் அமைதிப்பூ விளைச்சல் காணல்
ரணங்களினை விதந்துரைத்தல் எதுவும் வேண்டாம்
மொத்தத்தில் வாழுவதோ கொஞ்சக் காலம்
மூச்சுவிடும் நாள்வரைக்கும் அமைதி வேண்டும்



பனிமலரைப் பாசமாக வருடிக் காலை
பதுக்கி வைத்த புதுமைகளை அறிய வேண்டும்
தனிமையிலே பேரமைதி தவழும் சோலை
தமிழோடு நானிருந்து கதைக்க வேண்டும்
இனிமைமிகு பூங்குயிலின் பாஷை கேட்க
இந்திரனைச் சபித்ததுபோல் செவிகள் வேண்டும்
மணிக்கணக்கில் பேசுகின்றார் பெண்கள் எல்லாம்
மௌனமே! நீமொழியாய் மாற வேண்டும்

எப்போதும் நண்பர்கள் பாசம் வேண்டும்
இறுதிவரை உயிர்த்தமிழில் நேசம் வேண்டும்
துப்பாக்கி துப்புகின்ற தோட்டா போல
துள்ளிவரும் கவிதைவரி நெஞ்சில் வேண்டும்
இப்போதோ எக்கணமோ இறக்க முன்பு
எனைவளர்த்தோர் கனவுகளைச் செதுக்க வேண்டும்
தப்பாமல் மறுபிறவி எடுத்து வந்தென்
தாய் வயிற்றில் மறுபடியும் பிறக்க வேண்டும்

வானரத்தில் நான் நுழைந்து தலைகீழ்க் கூர்ப்பு
வடிவெடுத்து மகிழ்ச்சியோடு ஓடிப் பாய்ந்து
கானகத்தில் மானுடத்தை மறக்க வேண்டும்
கலியுகத்தார் சுயநலத்தை நகைக்க வேண்டும்
ஊனமனம் கொண்டவரின் ஊத்தை நீக்கும்
உஜாலாவை விஞ்ஞானம் அறிய வேண்டும்
ஆனமட்டும் முயற்சி செய்தேன் வரங்கள் கோர்த்தேன்
ஆயிரத்தில் ஒன்றிரண்டை இன்று கேட்டேன்

❐


# எறிகணை

அன்றுவீரர் எய்த கணைகள்
கொன்று தின்றது கொடிய அரக்கரை
இன்று போரிலே எங்கும் சிதறுது
கண்ணை இழந்த கயவர் எறிகணை
ஊழி நாடக உச்சக் காட்சியில்
பாழும் மானுடம் பட்டாசு கொழுத்துதோ?
தன்னைப் போலவே தாலி பறிக்கவா
கண்ணகி (!?) எறியும் இக்கலியுகச் சிலம்புகள்
மனிதனைத் தின்னும் வாழைப் பொத்தியோ?
அணுகுண்டரசனை ஆள விடாது
பூமிக்கல்லறை செதுக்கும் சிற்பியோ?
சேமித்த சில்லறை செல்லா உடல்களா?

கலியுகக் கூற்றின் கண்ணிலாக் கடாநீ!
மலிவு விற்பனையில் மனிதச் சதைகள்
வாரி வழங்கும் வணிகச் சந்தையில்
கூறுபோடும் கூரிய கொடுவாள்
உயிர்க்குஞ்சு தேடும் உலோகப் பருந்து
துயிலின் நிரந்தரத் தூதுவ அழைப்பு
செந்நீர் ஓடச் சிதறும் தேங்காய்
எந்தத் துடுப்பும் எதிர்க்காப் பந்து
நாட்டின் கழுத்தை நசுக்கத் துடித்தே
வீட்டில் விழுந்த மொட்டைக் கடிதம்
ஏந்திழை விழியின் இன்றைய உவமை
உலக மரண உயிலின் பேனா
விலாசம் இழந்த விரைவு மின்மினி
அள்ளி வீசும் 'ஆட்லறி' வாய்க்கு
கொள்ளி இட்டுக் குதூகலி மனிதா

❒







இ.சு.முரளிதரன்

# பனித்துளியில் உறங்கும் எரிமலைகள்

கோரைப்புல் மேயவந்த கொம்பு சீவிக் காளைகள்
நீரென்று நெஞ்சில் நினைத்துப் பனித்துளியை
காலால் இடறிவிட்டு காதலொடு வாய்வைக்க
கூழாகி மேனி, குருதி நதியாகி,
நீறான செய்தி நொடியில் பரவிற்று!
தீராத சந்தேகம் தீர்க்க வழியின்றி
பட்டிமாடு மாற்றான் பயிர்பரப்பில் மேயவிடும்
'துட்டசிங்க' தோற்றுத் துடிதுடித்தான்! என்செய்வான்?


முன்பெல்லாம் நெல்வயலில் மூர்க்கமொடு மேய்ந்துவிட்டு
சொன்னபடி வந்தவைதான், சோக வரலாற்றுச்
செல்நெறிக்குள் சிக்கி சிதைந்ததில்லை! தொன்றுதொட்டு
எல்லைகள் மீறும் எசமான் வெறியாட்டம்
ஏற்றபடி முன்னேற ஏரிழுத்த காளைகளை
காற்றசைக்கும் சின்னப் பனித்துளியா கொன்றதின்று?




ஏதும் விளங்காமல் ஏங்கிப் பிரம்பெடுத்தான்
தோதான காளைகளை தோல்வி களையவென
தோட்டத்தை நோக்கித் துரத்தினான்: எல்லைவரை
நாட்டமுடன் சென்றுவிட்ட நாம்பன்கள் கால்களினை
புல்நுனியில் வைத்தபோது பூமி அதிர்ந்தது காண்!
எல்லாம் விளங்கியது ஈகம் துலங்கியது

புல்நுனியில் தூங்கும் பனித்துளிகள் தொட்டணைத்தால்
சில்லிடும் பாசச் சிலிர்ப்பை பகிர்ந்தளிக்கும்
ஆனால் தனைத்தாங்கும் அன்னைத் தளிரதனை
வீணாய் அழித்தொழித்தால் வீரியம் கொள்ளும்
பனித்துளி உள்ளும் வெடித்துச் சிதறும்
தணியா எரிமலைகள் தான்!

❐





# மௌனக் குமுறல்

வெடி முழக்கம்
  கேட்கும்
நொடி சுணக்கம்
  இன்றி
குடியிழக்கும்
  வாழ்வு
மிடி கொடுக்கும்
இடம் பெயர்வில் கழியுதடா பகலிரவு - தமிழ்
இனத்திற்கு சொந்தமா சொல் நல்குரவு?



கண்பட்டதே
  நெஞ்சு
புண் பட்டதே
  குருதி
மண் தொட்டதே
  சோகம்
விண் முட்டுதே
பழுக்க முன்பே குருத்தோலை மரணம் - இங்கு
பல்லவியும் ஆகியதேன் சரணம்?

இ.சு.முரளிதரன்



இரவு வரும்
எமனின்
உறவு வரும்
ஆயுத
அரவு வரும்
சிதைக்கு
விறகு வரும்

ஊரடங்கில் வேகிறதே வாழ்க்கை - பரிதி
உதித்தவுடன் பிணவறையில் யாக்கை!

மாலை இடை
பூவாய்
சாலைத்தடை
நிற்கும்
கூலிப்படை
தருமோ
நாளை விடை?
உயிரினையும் சுட்டெரிக்கும் கேள்வி - நெஞ்சில்
ஊமையாய் நிகழ்கிறதோர் வேள்வி.

போர் கொல்லுமா?
தமிழ்த்
தேர் சொல்லுமா?
வெற்றித்
தார் வெல்லுமா?
இனிமை
ஊர் மெல்லுமா?

எனத் தூளியிலே ஆடும் துள்ளி ஆசை - அதை
எடுத்துரைக்க மௌனந்தான் பாஷை

❐



கண்பட்டதே
  நெஞ்சு
புண் பட்டதே
  குருதி
மண் தொட்டதே
  சோகம்
விண் முட்டுதே
பழுக்க முன்பே குருத்தோலை மரணம் - இங்கு
பல்லவியும் ஆகியதேன் சரணம்?





இ.சு.முரளிதரன்



பாதம் நனைக்கும் தெருவெள்ளம்
மேடுபள்ளம் தேடும் அழகில்
அருவி அபிநயங்கள்
ஆயிரமாய்த் தத்துவங்கள்
காகித ஓடம் கவிழ
சிறுவயதில்
ஏதோ டைட்டானிக்என நினைத்து
விக்கித்த ஞாபகங்கள் மீளும்
அவளுடைய தோளுரசி
ஆதரவாய் ஒற்றைக் குடைபிடித்து
சென்ற நாளும் சிந்தையிலே தட்டும்

உயிரின் வேர் தித்திக்கும்
சந்தம் சரமாரியாய் அவிழும்
சங்கீதம் கன்னக்கோல் வைத்து
இதயம் திருடிவிடும்
இன்பம் வெறுத்து இனிய மழை கண்டஞ்சி
இல்லம் ஒதுங்கும் மனிதரோடு
கூட்டாட்சி வைத்தேன் குசினி ஒழுகுமென்று!

எல்லையிலே
சா அருகில்
வான் கவிதை பார்த்து
ரசித்திருப்பான்
காவலரண் காக்கும் கவி

❒



# புழுவிற்கும் சிறகு முளைக்கும்

பாருக்குள் பண்புநிறை தேசம்; குடிமக்கள்
ஓர் உதரம் பெற்றெடுத்த செல்வமெனச் - சீர்பெற்று
வாழ்ந்தார்; இனவாதத் தீயிலின்று நம்தீவு
பாழ் பட்டு நிற்கிறதே பார்!

ஆங்கிலேயர் ஆதிக்கம் வேரறுத்து
ஒன்றுபட்டோம்
வாங்கினோம் நாட்டின் சுதந்திரத்தை -
ஓங்கிய
ஒற்றுமையை தேர்தல் களத்திலே
வெல்வதற்கு
விற்றுவிட்டார் நல்ல விலைக்கு!

ஆட்சிமொழிச் சட்டம் நூலகமெரிப்பு
வாட்ட தரப்படுத்தற் பேயாட - நாட்டினிலே
பேரின வாதப் பிணி பரவ; நம் வாழ்வோ
கூர்முள்ளில் வாழைக் குருத்து!






உண்ணா விரதம் உடன் படிக்கை ஊர்வலங்கள்
பண்பாடாய் செய்தோர் பலியானார் - மண்ணிலே
தாவித் துடித்தும் தமிழ்ப்புழுக்கள் தப்பவில்லை
கோவில் விரதமா கொக்கு!

சாத்வீகப்பாதை சறுக்கத் தமிழ்ப்புழுக்கள்
காத்திரமாய் வானில் சிறகடிக்க - பூத்தன
ஆயுதங்கள்! வண்ணத்துப் பூச்சிகள் வட்டமிட
தேய்பிறையாய் மாறியது தெற்கு!

வண்ணத்துப் பூச்சி வசமான பூங்காவில்
துன்புறுவோர் மீட்போம் படைநடத்தி - என்றுரைத்த
தென்னிலங்கை, சோலை சிதைத்துச்; சுரண்டியது
பின்னர் நிகழ்ந்தகதைகேள்!

இ.சு.முரளிதரன்





வடம் பிடிக்க வந்தார்கள் வாழ்வெனும் தேர்க்கு
சடசடக்கும் தர்மங்கள் தங்கி - அடராமா
தூதுக்கு வந்த அந்தத் துன்ப அனுமார்கள்
சீதைக்கும் சேர்த்திட்டார் தீ!

சன்னவிதை நட்டார் சாவின் அறுவடைக்கு
கன்னி விளைச்சலோ கர்ணரகம் - இன்றந்த
துன்பப் பயிர்ச் செய்கை தோழமை பூண்டதனால்
மண்டையோடு பூக்கும் மலிந்து!

போர்மரத்தில் ஏறிப் புதியபழம் கொண்டுவர
நார் உரித்தார் கற்களிலே நல்லமுறை - தேர்வாய்
துணையிருக்கும் கையிரண்டும் துண்டித்த பின்பா
கணையாழி சூட்டும் கனவு!

சிரமே அடுப்பாய் கரமே விறகாய்
குருதிநெய் கொண்டுகூழ் காய்ச்சும் - மறத்தை
பரணியிலே பாடி பயம் தவிர்த்தோர் நாளை
அரசிற்கே வைத்திடுவார்; ஆப்பு

❐

# அடுத்தொரு பிறவி வந்தால்

தேட்டத்தை தெருக்கள் கோயில்
  மரங்களை கிணற்றை வாசம்
ஊட்டித்தான் வளர்த்த மண்ணை
  உலவிடும் சுவாசக் காற்றை
வாட்டத்தோ டனைத்தும் விட்டு
  நிரைநிரை யாகச் செல்லும்
கூட்டத்தில் கலந்த போது
  குளிர்நிலா அவளைக் கண்டேன்

திக்கெட்டும் வெடியின் ஓசை
  தெருவினில் தமிழர் வாழ்வை
வக்கற்று அகதி யாக்கி
  வருத்திடும் கொடிய நேரம்
பக்கத்தில் எனது காதல்
  பறவையின் முன்னே செல்லல்
துக்கத்தை பெருக்கும் என்றே
  ஒதுங்கினேன் மரத்தின் ஓரம்



இ.சு.முரளிதரன்



அன்றென்னைப் பிரிந்து சென்றாள்
  அதுமுதல் நினைவு வெப்பம்
கொன்றென்னை உணவாய்க் கொள்ளும்
  கொலுசொலி தினமும் கேட்கும்
பெண்ணொன்று மணந்த பின்னர்
  பிரிவினை மறந்து வாழ்வான்
நன்றென்று நினைத்து இருப்பாள்
நானதைக் கெடுக்க வேண்டாம்

கிண்ணத்தில் மதுவை ஊற்றி
  குடித்திட முயன்ற போது
கன்னத்தில் பதித்த அந்த
  கடைசிநாள் முத்தந் தானே
எண்ணத்தில் எழுந்து நின்று
  தடுத்தது தொடர்ந்த வாழ்வில்
தென்பட்டார் கோடி பெண்கள்
  தேவதை உன்போல் இல்லை

இந்தத்'தை' கழிந்தால் ஆகும்
  எழுபது வயது என் இதய
சந்தத்தில் கலந்திருக்கும்
  சந்தன நிலவே! வாழ்வின்
அந்தத்தை கடந்து மீண்டும்
  அடுத்தொரு பிறவி வந்தால்
சந்திப்போம் சோகம் தீர்ப்போம்
  சாரைபோல் பிணைந்து கொள்வோம்

❐





# நன்றி

சஞ்சீவி
புதிய தரிசனம்
ஏகலைவன்
சுட்டுவிரல்
ஜீவநதி

விருப்பத்தின் கர்ப்பம்
எனப்பாடும் போது
விளங்காத சிலவற்றை
அவிழ்ப்பதற்கான மறைக்குறிப்புகள்
சில தட்டுப்படுகின்றன.
புல்நுனியில் பனித்துளிகள்,
பூங்குயிலின் சிம்வனி,
உயிர்த்துளியை உரசும் மழைத்திவலை,
அடுத்த வீட்டுயன்னல்,
உடன் பிறவாச் சோதரம்,
வடம் பிடித்து நல்லூர்த்தேர் இழுத்து
வேலை வணங்குகிற பக்தி நிலை,
பிரியா விடை நெகிழ்ச்சி, அடையாள
அட்டைஇன்றி, பாஸ் இன்றி செய்கின்ற
பயணங்கள்-இவை
மட்டுமல்ல-சொந்தமற்ற உயிர்
பிரிந்தால் மனிதம் பேசும் சுடுகாட்டுத்
தத்துவங்கள் இவற்றை எல்லாம்
விரும்புகிற ஒப்புதல் வாக்கு மூலமும்
அகலத்திரைக் காட்சியும்
அழகாய் மட்டுமல்ல,
ஆறுதல் தருவனவாயும் உள்ளன!

**கவிஞர் இ.முருகையன்**



200/-